# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2020

| தரம் - 09 | புவியியல் | நேரம்: 2 மணித்தியாலம் |
| --- | --- | --- |

பெயர் / சுட்டெண் ..............................................................................

### பகுதி I

**கவனிக்க.**

- ❖ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ❖ 1 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4), என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. ஆசியாக் கண்டத்தில் கடல் மட்டத்தினைவிட மிகத்தாழ்வாக அமைந்துள்ள கடல் எது?

(1) சாக்கடல் (2) ஏரல்கடல் (3) மஞ்சள்கடல் (4) செங்கடல்

2. உலகிலுள்ள சமயங்களுள் மேற்காசியாவில் தோன்றிய சமயம் எது?

(1) சைவம் (2) பௌத்தம் (3) இஸ்லாம் (4) இந்து

3. சேவைத்துறையில் முதன்னிலை வகிக்கும் 'டுபாய்' அரசு எந்த நாட்டில் அமைவு பெற்றுள்ளது?

(1) மொசப்பத்தேமியா (2) ஈரான் (3) சவுதிஅரேபியா (4) ஐக்கியஅரபுஎமிரேட்

4. ஏப்ரல் தொடக்கம் ஒக்டோபர் வரை பாகிஸ்தான் நாட்டில் நிலவும் 'காரிப்' பருவத்தில் பயிரிடப்படும் பயிர்களில் ஒன்று.

(1) சோளம் (2) பருத்தி (3) பார்லி (4) ஓட்ஸ்

5. ஆசியாக் கண்டத்தில் அமைவு பெற்ற உள் நாட்டுக் கடல்களில் ஒன்றான கஸ்பியன் கடலைச் சென்றடையும் நதிகளில் ஒன்று எது?

(1) அமூர்நதி (2) கங்கைநதி (3) யூரல்நதி (4) யாங்சிநதி

6. ஆசியாவில் பின்வரும் எந்த நாட்டில் 'மொங்கலோயிட்' இன மக்கள் வாழ்கின்றனர்.

(1) சிங்கப்பூர் (2) இலங்கை (3) பாகிஸ்தான் (4) ஆப்கானிஸ்தான்



kalvi.lk

7. உலகிலுள்ள காலநிலை வகைகளில் இலங்கை, இந்தியா, மியான்மார் போன்ற நாடுகளில் நிலவும் காலநிலை எது?

(1) அயன மழைக் காலநிலை
(2) அயனப் பருவக்காற்றுக் காலநிலை
(3) அயன சவன்னாக் காலநிலை
(4) இடைவெப்பக் காலநிலை

8. இலங்கையின் பின்வரும் நிலத்தோற்ற அம்சங்களுள் கரையோர அம்சத்தை மட்டும் கொண்டிருப்பது எது?

(1) ஓங்கல் (2) எச்சக்குன்றுகள் (3) பீடபூமி (4) மலை

9. தென் மேல் பருவக்காற்று மழை இலங்கையில் கிடைக்கும் காலப்பகுதி யாது?

(1) மார்ச்--ஏப்ரல்
(2) டிசம்பர்--பெப்ரவரி
(3) மே—செப்ரெம்பர்
(4) ஒக்டோபர்--நவம்பர்

10. இலங்கையில் மிக உயரமாக அமைந்துள்ள மலையையும், மிக நீளமான நதியையும் முறையே கொண்டிருக்கும் விடை எது?

(1) மகாவலிகங்கை, பேதுறுதாலகாலமலை
(2) சிவனொளிபாதமலை, மகாவலிகங்கை
(3) பேதுறுதாலகாலமலை, களனிகங்கை
(4) பேதுறுதாலகாலமலை, மகாவலிகங்கை

11. பின்வரும் மாவட்டங்களுள் தாழ் நில ஈரவலயக் காலநிலை நிலவும் மாவட்டம் எது?

(1) நுவரேலியா (2) அநுராதபுரம் (3) களுத்துறை (4) மன்னார்

12. இலங்கையில் அயன மழைக்காடுகள் பரந்துள்ள பிரதேசங்களுள் ஒன்று.

(1) கன்னெலிய (2) சோமாவதிய (3) உடவளவை (4) வில்பத்து

13. சனத்தொகைப் பரம்பலின் அடிப்படையில் இலங்கையில் சனத்தொகை அடர்த்தி கூடிய பிரதேசம் எது?

(1) முல்லைத்தீவு (2) கொழும்பு (3) ஹம்பகா (4) மொனராகலை

14. ஆசியாவில் அமைந்துள்ள "கன்சன்யுங்கா" மலைச்சிகரத்தின் உயரம் எத்தனை மீற்றர் ஆகும்

(1) 8167 (2) 8462 (3) 8848 (4) 8586

15. இலங்கையின் தரைத்தோற்ற அம்சங்களைக் காட்டுவதற்கான 1:50,000 அளவுத்திட்டத்தில் தயாரிக்கப் பட்டுள்ள படத்தாள்களின் எண்ணிக்கை யாது?

(1) 92 (2) 91 (3) 89 (4) 72



kalvi.lk

**16ஆம், 17ஆம் வினாக்களுக்கு 'அ' மற்றும் 'ஆ' என்னும் நிரல்களைப் பயன்படுத்தி அவற்றின் பொருத்தப் பாட்டுக்கு அமைய சரியான ஆங்கில எழுத்தைத் தொடர்பு படுத்தி பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

16.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| **ஆசியாவின் புராதன நாகரிகம்.** | **தோன்றிய நதிக்கரையோரம்** |
| 1) சிந்துவெளி நாகரிகம் | A- யூப்பிரட்டீஸ்,தைகிறீஸ் நதிகள் |
| 2) மொசப்பத்தேமியா நாகரிகம். | B- சிந்துநதி |
| 3) சீனா நாகரிகம் | C- நைல்நதி |
| | D- குவாங்கோநதி |

(1) BCD (2) BAD (3) CBA (4) BCA

17.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| **தரைத்தோற்ற அம்சங்கள்** | **அதற்கான எடுத்துக்காட்டுக்கள்** |
| 1) கணவாய் | A- மன்னார் |
| 2) மேட்டுநிலம் | B- அப்புத்தளை |
| 3) தீவு | C- கண்டி |
| | D- திருகோணமலை |

(1) BCD (2) BAD (3) CBA (4) BCA

18.'ரம்சார்' சமவாயம் எவ்வகைச் சூழலைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ளது.

(1) முட்புதர்க்காடு (2) புல்நிலங்கள் (3) ஈரநிலம் (4) காடுகள்

19.சூழலைப் பாதிக்கும் மனித நடவடிக்கையாக **அமையாதது** எது?

(1) எரிமலை வெடிப்பு (2) போர் நடவடிக்கை
(3) சுவட்டு எரிபொருள் பயன்பாடு (4) காடுகளை அழித்தல்

20.1:50,000 இடவிளக்கப் படங்களில் பயன்படுத்தப்படும் பௌதீக அம்சங்களுள் ஒன்று எது?

(1) வீதிகள் (2) பாடசாலை (3) நெல்வயல் (4) ஆறுகள்

(20X2=40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி II

**கவனிக்க**

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **முதலாம் வினா உட்பட** மேலும் **நான்கு** வினாக்களைத் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

1) **(அ)** இலங்கையின் 1:50,000 இடவிளக்கப் படங்களில் பயன்படுத்தப்படும் பின்வரும் அம்சங்களுக்குரிய வழக்கக் குறியீடுகளை பொருத்தமான நிறங்களைப் பயன்படுத்தி வரைந்து காட்டுக.


I. கிராமசேவகர் பிரிவு எல்லை
II. B தர பிரதான வீதி
III. ஹோட்டல்
IV. நெல்வயல்
V. வைத்தியசாலை
VI. பொலிஸ்நிலையம்.

(6X1= 6புள்ளிகள்)

**(ஆ)** தரப்பட்டுள்ள ஆசியப் புறவுருவப் படத்தில் இலக்கங்களினால் குறித்துக் காட்டப் பட்டுள்ள அம்சங்கள் சில கீழே தரப்பட்டுள்ளது. அந்த அம்சங்கள் குறித்துக் காட்டும் சரியான இலக்கத்தினை அதற்கு எதிரே உள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக?

i.தார்பாலைவனம் (…….)
ii.பிலிப்பைன்ஸ் (…….)
iii.வுகான் (…….)
iv.இமயமலை (…….)
v.மஞ்சள் கடல் (…….)
vi.சிங்கப்பூர் நாடு (…….)

(6X1= 6புள்ளிகள்)




2)
**i.** ஆசியப் பிரதேச நிலத்தோற்றங்களில்

(a) ஆசியாவில் மிகவும் உயர்ந்த மலைச்சிகரம்.
(b) ஆசியாவில் மிக நீளமான நதி.
(c) ஆசியாவில் மிக ஆழமான ஏரி என்பனவற்றின் பெயரை முறையே தருக? (3 புள்ளிகள்)

**ii.** ஆசியப் பிரதேசத்தில் உள்ள மானிட அடிப்படையிலான சிறப்பம்சங்கள் **நான்கு** தருக? (4 புள்ளிகள்)

**iii.** ஆசியாவின் காலநிலை வலயத்தில் பரவியுள்ள இயற்கைத் தாவர வகைகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு அவற்றில் **ஒன்றின்** சிறப்பியல்புகளை விளக்குக? (5 புள்ளிகள்)



kalvi.lk

3)

i. உலகில் அதிக சனத்தொகை கொண்ட **மூன்று** ஆசிய நாடுகளைத் தருக? (3 புள்ளிகள்)

ii. ஆசியாவின் பிரதான கைத்தொழில் நாடான யப்பானில் உள்ள உற்பத்திக் கைத்தொழில்கள் **நான்கு** தருக? (4 புள்ளிகள்)

iii. ஆசியாவின் சேவை நிலையமாக டுபாய் பிரசித்தி பெற்றமைக்கான காரணங்கள் **இரண்டைக்** குறிப்பிட்டு விளக்குக? (5 புள்ளிகள்)

4)

i. இலங்கையின் பிரதான **மூன்று** குடியிருப்புக்களின் பெயரைத் தருக? (3 புள்ளிகள்)

ii. இலங்கையின் மேல்மாகாணத்தில் சனத்தொகை அதிகரித்தமைக்கான காரணங்கள் **நான்கு** தருக? (4 புள்ளிகள்)

iii. அண்மைக்காலத்தில் இலங்கையில் விருத்தி செய்யப்பட்ட **மூன்று** உட்கட்டமைப்பு வசதிகளைக் குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றினை** விளக்குக? (5 புள்ளிகள்)

5)

i. இலங்கையின் கரையோரச் சமவெளியில் காணப்படும் மானிட செயற்பாடுகள் **மூன்று** தருக? (3 புள்ளிகள்)

ii. யாழ்ப்பாணக் குடாநாட்டில் நடைபெறும் பனை மரத்தோடு தொடர்புடைய உற்பத்திகள் **நான்கு** தருக? (4 புள்ளிகள்)

iii. மலைநாட்டின் மனித நடவடிக்கைகளை அப்பிரதேச நிலத்தோற்றமே தீர்மானித்துள்ளது என்பதற்கு ஆதாரமான **மூன்று** மனித செயற்பாட்டைக் குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றினை** விளக்குக? (5 புள்ளிகள்)

6)

i. 1978ஆம் ஆண்டு "யுனெஸ்கோ" பிரகடனத்தின்படி அபிவிருத்தி என்றால் என்ன என்பதைக் குறிப்பிடுக? (3 புள்ளிகள்)

ii. அபிவிருத்தியை அளவிடுவதற்காகப் பயன்படும் குறிகாட்டிகள் **நான்கு** தருக? (4 புள்ளிகள்)

iii. மேலே வினா ii இல் குறிப்பிட்ட குறிகாட்டிகள் **இரண்டினைக்** குறிப்பிட்டு அவை ஒரு நாட்டின் அபிவிருத்தியில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதனை விளக்குக? (5 புள்ளிகள்)

7)

i. சூழலியல் சமநிலையைப் பேணுவதன் முக்கியத்துவங்கள் **மூன்று** தருக? (3 புள்ளிகள்)

ii. சூழலியல் சமநிலையைப் பாதுகாப்பதற்கு இலங்கை அரசினால் முன்னெடுக்கப்பட்ட **இரண்டு** திட்டங்களையும், **இரண்டு** சட்டங்களையும் குறிப்பிடுக? (4 புள்ளிகள்)

iii. சூழலியல் சமநிலையின்மையை உருவாக்கும் **மூன்று** காரணிகளைக் குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றினை** விளக்குக? (5 புள்ளிகள்)



kalvi.lk

தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள் கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் இணைந்து கொள்ள முடியும்.

JOIN NOW

### கட்டண விபரங்கள்

**தமிழ் Medium**

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

**English Medium**

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP

075 287 1457